**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 227 / 2023**

**வா.சா.2 – ராஜேஸ்கண்ணன்** **22.07.2026**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கை வாதி திருமுருகன் தெய்வேந்திரனுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். எனது அப்பா பெயர் கோபாலகிருஷ்ணன். எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரர் பெயர் வாசுதேவன். எனது அப்பாவின் உடன்பிறந்த சகோதரியை தான் வாதியின் அப்பா திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். நேசன் என்பவர் பாலு என்பவருக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரிதான். நேசன் எனக்கு அய்யா முறை ஆகும். நான் கட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து சேகருக்கு எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. சேகர் சென்னையில் காவல் துறையில் பணிபுரிந்து வருகிறார். வாதி திருமுருகன் சென்னையில் பணிபுரிந்து வருகிறார். சேகர் எப்போது பணி ஓய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது. சேகர் பெயரில் தாவா சொத்திற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. 40 ஆண்டுகளுக்கு முன்பே வாதியின் தகப்பனார் சேகர் பெயரில் ஏற்பட்ட பட்டா எதையும் நான் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கு பயிர்காப்பீடு எனது பெயரில் செய்தேன். சுமார் 12 வருடங்களாக பயிர்காப்பீடு செய்தேன், எனது பெயரில் பயிர் காப்பீடு செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி திருமுருகனிடம் கொடுத்துள்ளேன். நான் பயிர்காப்பீடு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை பயிர்காப்பீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி திருமுருகனுக்கு அவரது அப்பா

சேகர் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட எனது மாமா சேகர் தான் என்னை அழைத்து சென்றார். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள வாசுதேவன் எனது மாமா ஆவார். வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 4 சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஒரு சொத்தின் சர்வே எண் மட்டும் தெரியும். வாதி வா.சா.ஆ.7 ஆவணம் ஏற்பட்ட காலத்திலிருந்து சென்னையில் தங்கி வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 2010ம் ஆண்டு முதல் குத்தகை பெற்று அனுபவம் செய்து வந்தேன். தாவாசொத்திற்கு நான் வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அந்த வரி ரசீதை நான் தாக்கல் செய்யவில்லை. எனக்கு முன்பு எனது அப்பா தாவா சொத்தை 40 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்தார். எனது தகப்பனார் 40 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்தார் என்பதற்கும் அதன்பின்பு நான் விவசாயம் செய்து வந்ததற்கும் ஆவணங்கள் உள்ளதா என்றால் பயிர்காப்பீடு ஆவணம் உள்ளது. நான் தாவா சொத்திற்கு 3 வருடங்களுக்கு பயிர்காப்பீடு செய்துள்ளேன். நான் 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் பயிர்காப்பீடு செய்தேன். நான் சொன்னது போல் மேற்படி ஆண்டுகளில் நான் பயிர்காப்பீடு செய்யவில்லை என்றும் அவ்வாறு ஆவணங்கள் இருந்தால் அது என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 3 வருடங்களாக பாலு என்பவர் தாவா சொத்தை குத்தகைக்கு பெற்றதற்கு நான் ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பயிர்காப்பீடு ஆவணம் நான் பார்த்துள்ளேன். மேற்படி பாலு எனக்கு மாமா முறை ஆவார். தாவா

சொத்தை நானோ, எனது அப்பாவோ, வாதியோ, வாதியின் அப்பாவோ, மற்றும் பாலுவோ எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும் பிரதிவாதி தான் தாவா சொத்தை சட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை